# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2124/7 - 2019 මැයි මස 21 වැනි අඟහරුවාදා - 2019.05.21

*2124/7 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தின் பதியதலாவ பிரதேச செயலகப் பிரிவின் பின்தென்ன பற்று தெற்கு சிறு பிரிவின் பதியதலாவ கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளரினால் தயாரிக்கப்பட்ட பதியதலாவ டொ. பொ. பிபி 49 மேலதிக இல. 53 இல் காணித் துண்டு இல. 3515 எனக் காட்டப்பட்டுள்ள 1.0120 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய ஆன மகபெத்தவத்த எனும் காணித் துண்டின் எல்லைகள் பின்வருமாறு :

வடக்கு : காணித் துண்டு இல. 3495, 242 மற்றும் 243; கிழக்கு : காணித் துண்டு இல. 242 மற்றும் 243; தெற்கு : காணித் துண்டு இல. 242; மேற்கு : காணித் துண்டு இல. 242 மற்றும் 3495.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 13 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு பதியதலாவ பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 13 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஆர். எம். என். விஜயதுங்க,
பிரதேச செயலாளர்,
பதியதலாவ.

பிரதேச செயலகம்,
பதியதலாவ.

6 - 25


1A - G 30121 - 33 (2019/05)

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: நுவ/3/1/8/கா.எ/143.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/4/2014/LO/359.

இல. 2063/32 உம் 2018, மாச்சு மாதம் 22 ஆந் திகதிய 2063/32 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானப் பத்திரிகையில் அறிவிக்கப்பட்ட அறிவித்தலின் பகுதி III இல் 1A பக்கத்தில் கடைசிப்பகுதி கீழே காட்டப்பட்டவாறு திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 24 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு நுவரெலியா பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 14 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

டபிள்யூ. எம். ஆனந்த,
பிரதேச செயலாளர்,
நுவரெலியா.

பிரதேச செயலகம்,
நுவரெலியா,
2019, மே 15.

6 - 26

---

திருத்தம்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல.: மீரி/பிசெ/காணி/3/510247/434.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் கீழ் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2017.03.27 ஆந் திகதிய 2012/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் 8ஏ/7ஏ ஆம் பக்கங்களில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் கடஸ்ரல் வரைபட இல. 510247 இல் துண்டு இலக்கங்கள் 435, 434 திருத்தப்பட்டு துண்டு இலக்கங்கள் 467, 468 மற்றும் 469 எனவும் திருத்தம் செய்யப்படுகின்றது என இத்தால் அறவிக்கின்றேன்.

01. **துண்டு இல. 467**
காணியின் பெயர் : கோங்கஹவத்தை; விபரம்: தோட்டம் ; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: கப்புறு பண்டார அப்புஹாமிலாகே தாரங்க தயான் கப்புறுபண்டார மற்றும் கப்புறுபண்டார அப்புஹாமிலாகே அயோமி சாலிகா கப்புறுபண்டார, இல. 156, கல்கமுவ, வெயாங்கொடை; விஸ்தீரணம் : 0.0707 ஹெக்டயார் (காணி எடுத்தல் நடவடிக்கை பூர்த்தி).

02. **துண்டு இல. 468**
காணியின் பெயர் : கோங்கஹவத்தை; விபரம்: தோட்டம் ; உரிமை கோருபவர்: அரசு ; ஆரம்ப உரிமை கோருவோர்: கப்புறு பண்டார அப்புஹாமிலாகே தாரங்க தயான் கப்புறுபண்டார, கல்கமுவ, வெயாங்கொடை; விஸ்தீரணம் : 0.0091 ஹெக்டயார் (காணி எடுத்தல் ஏற்பாடு பூர்த்தி).

03. **துண்டு இல. 469**
காணியின் பெயர் : - ; விபரம்: வீதி; உரிமை கோருபவர்: அரசு ; ஆரம்ப உரிமை கோருவோர்: கப்புறுபண்டார அப்புஹாமிலாகே தாரங்க தயான் கப்புறுபண்டார மற்றும் கப்புறுபண்டார அப்புஹாமிலாகே அயோமி சாலிகா கப்புறுபண்டார, இல. 156, கல்கமுவ, வெயாங்கொடை; விஸ்தீரணம் : 0.0091 ஹெக்டயார் (காணி எடுத்தல் நடவடிக்கை பூர்த்தி).

வை. ஐ. எம். சில்வா,
பிரதேச செயலாளர்,
மீரிகம.

பிரதேச செயலகம்,
மீரிகம,
2019, மே 16.

6 - 27

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.